1979 மார்ச் 31]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எங்கள் பகுதியில் மலைவாழ் மக்களுக்காக காலனி ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மக்கள் அங்கேயே குடிபோகவில்லை. ஒரு பள்ளிக்கூடமும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குழந்தைகள் அந்தப் பள்ளியில் படிக்கப் போகவில்லை. அதனால் அந்தப் பள்ளி செயல்படாமல் இருக்கின்றது. மலைவாழ் மக்களுக்கு ஒரு சொஸைடியிட்டியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது தனியார் வசத்தில் இருந்து லாபத்தில் நடந்து வருகிறது. அந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதற்குத் தேவையான முயற்சி எடுப்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒரு கேள்விக்கு 12 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன என்பதைக் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு.

*குறுகிய கால வினா எண் 33—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம் சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன் மலைப்பகுதியில் 1976-77-ல் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்ட மக்கள் நல்வாழ்வுக்காக என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கல்வராயன் மலைப்பகுதியில் 5,828 குடும்பங்களைச் சார்ந்த 24,945 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார்கள். அம்முறையும் அகற்றப்பட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதியில் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு விவசாயத்திற்கு நிலங்களும் வீடு கட்ட வீட்டு மனைகளும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்காக 18 குழந்தைகள் காப்பகங்களும் மூன்று குடியிருப்பு பள்ளியும் துவங்கப்பட்டுள்ளன. புதுப்பாலப்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகமும், சுகாதார பணிகளுக்காக 4 மருத்துவக் குழுக்களும் பணியாற்று

[1979 மார்ச் 31

கின்றன. 3 கூட்டுறவு வங்கிகள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுகிறது. வேளாண்மைப் பணிகளுக்கு விவசாயக் கடனும் கொடுக்கப்படுகிறது. ரூபாய் 57.3 இலட்ச செலவில் சாலைப் போக்கு வரத்து வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்வராயன் மலைப் பகுதியில் உள்ள நிலங்கள் எத்தனை ஏக்கர்? எத்தனை ஏக்கர் பயிரிடப்படுகிறது? அந்த நிலங்களை சிலர் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அப்படி ஆக்கிரமிப்புச் செய்தவர்களை வெளியேற்றுவதற்கு அரசு ஒரு சட்டம் இயற்றுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப்பகுதியிலே உள்ள நிலங்கள் எத்தனை ஏக்கர் என்று கணக்கிட தற்போது ரெவின்யூ துறையினர் அளந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தகவல் வந்தவுடன் சொல்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: அங்கே கேமூ டேம், மல்லியப்பாடி வழியாக வெள்ளிமலையில் சாலை போடும் திட்டத்தை இந்த ஆண்டில் நிறைவேற்றித்தர முடியுமா? மற்றும் 1,000 ஏக்கரில் பழத் தோட்டத்தைச் சாகுபடி செய்யவேண்டும் என்ற ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்தச் சாலை போடுவது பற்றி கலந்து பேசப்பட்டு இப்போது தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. பழத் தோட்டம் விஷயமாக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கொட்டம்பட்டு அகதிகள் முகாம்.

*குறுகிய கால வினா எண் 34—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கொட்டம்பட்டு அகதிகள் முகாமிலிருந்து மைசூர் அரசு விவசாயப் பண்ணைக்கு அகதிகள் எவரேனும் அனுப்பப்பெற்றனரா?

(ஆ) ஆம் எனில், இப்போது அவர்கள் பணியில் உள்ளார்களா?